குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், ஓமலூர்,
முன்னிலை: – திரு.S.சதாம் உசேன், B.A.L.L.B.,
குற்றவியல் நீதித்துறை நடுவர், (மு.கூ.பொ) ஓமலூர்.

2026 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 07–ஆம் நாள் செவ்வாய்கிழமை

CMP No: 277/2026,
in
CC.No. 162/2021
in
Cr.No.21/2019
in
(தொளசம்பட்டி காவல்நிலையம்)

A3.திரு.வெங்கடேசன் த/பெ.முத்து

.....மனுதாரர்/எதிரி

//எதிர்//

காவல் உதவி ஆய்வாளர்,
தொளசம்பட்டி காவல் நிலையம்,
குற்ற எண்.21/2019,
சட்டபிரிவுகள்.U/s.294(b),323,506(i) IPC.

.... எதிர்மனுதாரர்

இம்மனுவானது 04.07.2026–ம் தேதி அன்று இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.K.திருமுகம் அவர்கள் முன்னிலையாகியும், குற்ற முறையிடுபவர்/புகார்தாரர் தரப்பில் அரசு உதவி குற்றத்துறை வழக்கறிஞர் அவர்கள் முன்னிலையாகியும், அவர்கள் முன்னிலையாகியும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்.

## உத்தரவு

இம்மனுவானது பிரிவு 480 BNSS– ன் கீழ் மனுதாரரை பிணையில் விட வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**வழக்கின் வரலாறு சுருக்கம்:**

இவ்வழக்கின் இவ்வழக்கின் வாதி செல்லம்மாள் கோயிலூர் மேல் காலனி M.N.பட்டி கிராமம் மேட்டுர் தாலுக்கா என்ற முகவரியில் குடும்பத்துடன் குடியிருந்து வருவதாகவும், வாதியின் வீட்டுக்கு அருகில் குடியிருக்கும் எதிரி 1) ஆறுமுகம்

SADHAMHUSAIN S

Digitally signed by SADHAMHUSAIN S
Date: 2026.07.07 16:38:25 +0530

தினந்தோறும் குடித்துவிட்டு வந்து வாதியின் குழந்தைகள் முன்பாகவே சிறுநீர் கழிப்பது வாதியை கெட்ட வார்த்தைகளால் திட்டுவது என்ற பிரச்சனை செய்து வந்துள்ளதாகவும், அதனால் இரு குடும்பத்தாருக்கும் அடிக்கடி தகராறு ஏற்பட்டு வந்த நிலையில் 27.01.2019 ம் தேதி 20.00 மணிக்கு வாதி வீட்டின் எதிரிகள் 1) ஆறுமுகம், 2) தம்பிதுரை 3) வெங்கடேஷ் ஆகியோர்கள் வந்து வாதியை பார்த்து தேவிடியா கண்டார ஓலி உன்னால் தான் எங்களுக்கு பிரச்சனை என்று கெட்ட வார்த்தையால் திட்டி அவமானப்படுத்தியும், எதிரி 1)ஆறுமுகம் கையால் கன்னத்தின் மீது அறைந்தும், எதிரி 2) தம்பிதுரை கையால் முதுகின் மீது குத்தியும், எதிரி 3) வெங்கடேஷ் கையால் இடது கை மற்றும் முதுகு ஆகிய இடங்களில் குத்தி சொற்ப காயங்களை ஏற்படுத்தியும், மேற்படி வாதியை பார்த்து எதிரிகள் மூன்று பேரும் இன்னைக்கு தப்பிச்சிகிட்ட என்னைக்கு இருந்தாலும் உன்னை கொல்லாமல் விடமாட்டோம் என்று மிரட்டிவிட்டு சென்றதாகவும்,, பிறகு தொளசம்பட்டி காவல்நிலைய குற்றவழக்கு எண்.21/2019, சட்டபிரிவு.294(b),323,506(i) IPC. நாள் 28.01.2019 ன் படி பதிவு செயய்யப்பட்டது.

**<u>மனுவின் சுருக்கம்:</u>**

மனுதாரர் பிரிவு.U/s. 294(b),323,506(i) IPC, குற்றத்திற்காக 14.06.2026 அன்று கைது செய்யப்பட்டு நீதிமன்ற காவலில் உள்ளார் என்றும், மனுதாரர் மேற்படி குற்றத்தை செய்யவில்லை என்றும், மேற்படி குற்றம் ஆனது மரண தண்டனையோ அல்லது ஆயுள் கால தண்டனையோ விதிக்க கூடிய குற்றம் இல்லை என்றும், மேலும் மனுதாரர் மதிக்கத்தக்க குடிமகன் என்றும், அவர் மறைந்து கொள்ள மாட்டார் என்றும், நீதிமன்றம் எதிர்பார்க்கும் போதுமான பிணைகளையும், பிணை பத்திரத்தையும், எழுதி தருவதற்கு தயாராக உள்ளார் என்றும், மேலும் எதிரி 23 நாட்களாக சிறையில் இருந்து வருகிறார் என்றும், எதிரியை பிணையில் விடுவித்தால் நீதிமன்றம் விதிக்கும் எந்தவித நிபந்தனைக்கும் கட்டுப்பட தயாராக உள்ளார் என்றும் கூறப்பட்டுள்ளது.

**<u>அரசு தரப்பின் பதில்</u>**

எதிர்மனுதாரர் காவல் துறை மற்றும் அரசு தரப்பு வழக்கறிஞர் இவ்வழக்கு புலன் விசாரணை முடிந்து இந்நீதிமன்றத்தில் CC.No.162/2021 ஆக வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டு உள்ளதாலும், எதிரியை பிணையில் விட்டால் அவர் மீண்டும் இது

SADHAMHUSAIN S

Digitally signed by SADHAMHUSAIN S
Date: 2026.07.07 16:38:31 +0530

போன்ற குற்றச்செயலில் ஈடுபடுவார் என்றும், மீண்டும் இதே போன்று வழக்கு விசாரணைக்கு ஆஜராகமல் எதிரி தலைமறைவு ஆகிவிடுவார் என்றும், மேற்கண்ட காரணங்களுக்காக மிகவும் கடுமையான ஆட்சேபனை தெரிவித்தனர்.

**<u>தீர்வு:</u>**

இரு தரப்பும் கேட்கப்பட்டது, ஆவணங்கள் பரிசீலினை செய்யப்பட்டது. இவ்வழக்கின் கோப்புகளை பார்க்கும் போது எதிரியானவர் 14.06.2026 அன்று பிரிவு. 294(b),323,506(i) IPC, குற்றத்திற்காக கைது செய்யப்பட்டு நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் என்றும், அவர் இதுநாள் வரையிலும் சிறையில் இருக்கிறார் என்று தெரிய வருகிறது. மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் மனுதாரர் இந்த குற்றத்தை செய்யவில்லை என்றும், இந்த வழக்கு பொய்யாக போடப்பட்டுள்ளது என்றும், மனுதாரர் கடந்த 23 நாட்களாக நீதிமன்ற காவலில் உள்ளார் என்றும், அவரை பிணையில் விட வேண்டும் என்று வாதிட்டனர். எதிரி இனிவரும் வழக்கு வாய்தா தேதியில் தவறாமல் இந்நீதிமன்றத்தின் முன் ஆஜராவதாக உறுதி அளித்துள்ளார் என்றும், எதிரி தற்போது பிணையதார்கள் கொடுக்க தயராக இருப்பதாகவும், மேலும் மனுதாரர்/எதிரியை நீதிமன்ற காவலில் வைப்பது அவசியம் இல்லாதது என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது.

அரசு தரப்பானது மனுதாரரை பிணையில் விடும் பட்சத்தில் அவர் சாட்சிகளை கலைக்கக் கூடும் என்பதற்கும், தலைமறைவாகிவிடுவார் என்பதற்கும் தகுந்த திருப்திக்காரமான காரணங்களை எதுவும் தெரிவிக்கவில்லை. மேலும் உச்ச நீதிமன்றத்தின் அறிவுரையான **'bail is the rule and Jail is an exception'** என்பதையும் இந்த நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது. இருந்த போதிலும் மனுதாரரின் பங்களிப்பை விசாரணையிலும் இந்த நீதிமன்றத்திலும் உறுதி செய்வதற்காக தகுந்த நிபந்தனைகளுடன் மனுதாரரை பிணையில் விடுவது தகுந்ததாக மற்றும் சரியானதாக இந்த நீதிமன்றம் கருதுகிறது. முடிவாக இம்மனுவானது கீழ் கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு அனுமதிக்கப்படுகிறது:

1. மனுதாரர் சொந்தமாக **ரூ.10,000/−த்திற்கு** பிணைப்பத்திரமும், அதே தொகைக்கு **இரண்டு நபர்கள் பிணை பத்திரமும்** எழுதி தரவேண்டும்.

2. மனுதாரர் ஜாமீன் மனு மற்றும் பிணைபத்திரம் **குற்றவியல் நடைமுறை சட்டம்**

Digitally signed by SADHAMHUSAIN S
SADHAMHUSAIN S
Date: 2026.07.07 16:38:34 +0530

**2019 விதி 14–ன்** படி இருக்க வேண்டும். மேலும் பிணையதாரர்களின் புகைப்படமானது ஜாமீன் கொடுப்பதற்கு 6 மாதத்திற்குள்ளாக எடுக்கப்பட்ட புகைப்படமாக இருக்க வேண்டும்.

3. எதிரி பிணையில் இருந்து வெளியே வந்த நாள் முதல் தினமும் காலை 10.00 இந்நீதிமன்றத்தின் முன் ஆஜராகி 15 நாட்கள் கையொப்பம் இடவேண்டும்.

4. மனுதாரர் அரசு தரப்பு சாட்சியங்களை கலைக்க கூடாது என்றும்,

5. மனுதாரர் இது போன்ற குற்றச் செயல்களில் ஈடுபட கூடாது என்றும்,

6.மனுதாரர் தலைமறைவு ஆகாமல் விசாரணைக்கு அழைக்கும் போது நீதிமன்றத்திலும் எதிர் மனுதாரர் காவல் நிலையத்திலும் ஆஜராக வேண்டும் என்றும் உத்தரவிடப்படுகிறது.

மேற்படி நிபந்தணைகளுக்கு உட்பட்டு இந்த மனுவானது அனுமதிக்கப்படுகிறது.

இந்த ஆணை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கனிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு 2026–ம் ஆண்டு ஜுலை 07–ம் செவ்வாய்கிழமை நாளாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

SADHAMHUSAIN S

Digitally signed by SADHAMHUSAIN S
Date: 2026.07.07 16:38:37 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

ஓமலூர்.